# பவுலைப் போல தீங்கனுபவித்தல்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் P3b பாடத்தை வாசிக்கவும்.



"நான் எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேன் என்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன். அப்படிப் போராடினதாலே எனக்குப் பிரயோஜனம் என்ன. மரித்தோர் உயிர்த்தெழா விட்டால், புசிப்போம் குடிப்போம் நாளைக்கு சாவோம் என்று சொல்லலாமே." (1 கொரி 15:32)

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, நியாயமற்ற துன்புறுத்தல்களை எதிர் கொள்ள பவுலுக்கு நீர் தந்த அதே பலத்தையும், ஞானத்தையும், பொறுமையையும், கிருபையையும் தயை கூர்ந்து எங்களுக்கும் தாரும்."

1. **துன்புறுத்தல்களைத் தாங்க உங்கள் இருதயத்தை தேவ வார்த்தையால் ஆயத்தப்படுத்துங்கள்.**

**குறிப்பு:** தங்கள் வாழ்க்கையில் எல்லோரும் வருத்தந்தரும் விஷயங்களினால் துன்பப்படுகின்றனர். தேவையில்லாமல் நாம் **பாடுகளை** அனுபவிக்கிறோம். தவறு செய்து **தண்டனையைப்** பெறுகிறோம். சாத்தானால் ஒடுக்கப்படுகிறோம். நமது மதத்தை வெறுப்பவர்களால் **துன்புறுத்தப்படுகிறோம்.**

அறிவு சிறந்த நாடுகளில் எல்லாம் மதத்தின் காரணமாக துன்புறுத்துவது சட்ட விரோதமானதாகும். இருந்தாலும் அது நடைபெறுகிறது. நாம் துன்புறுத்தப்படும் போது நம்மை துன்புறுத்துபவர்களை ஆசீர்வதிக்குமாறு நாம் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். இயேசுவுக்கு உண்மையானவர்களாய் இருக்க கிருபை தருமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். எல்லா விசுவாச சமுதாயங்களையும் துன்புறுத்தல்களில் இருந்து காக்க சட்டம் புரிந்தவர்கள் அமைதியான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**மாற்கு 8:27-38** ஐ வாசித்து இயேசுவைப் பற்றியும் அவரது பாடுகளைப் பற்றியும் முக்கியமான சத்தியங்களை அறிந்து கொள்க.

- இயேசு உண்மையில் யார் என்பதை அறிந்து கொள்க *(வச. 27-30).*
- இயேசு பூமிக்கு ஏன் வந்தார் என்பதை அறிக *(31-33).*
- இயேசு, தமது சீஷர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்பினார் *(34-38).*

இயேசுவை சந்திக்கு முன் விசுவாசிகளுக்கு பவுல் என்ன செய்தார் என்பதை **அப். 8:3** ல் அறிந்து கொள்க.

விசுவாசிகளை வேட்டையாடிய பவுலை அவர்களுக்கு சேவை செய்யுமாறு தேவன் எவ்வாறு மாற்றினார் என்பதை **அப். 9:1-31** ல் காண்க.

- இயேசு உயிரோடு இருந்து எல்லாவற்றையும் ஆளுகிறார் என்பதை சவுல் முதன் முதலில் எவ்வாறு அறிந்து கொண்டார்? *(1-8).*
- சவுலுக்காக தேவன் வைத்திருந்த நோக்கம் என்ன? *(15)*
- சவுலுக்கு என்ன நேரிடும் என்று தேவன் கூறினார்? *(16)*
- முதலில் இயேசுவுக்கு சவுல் எவ்வாறு பதில் அளித்தார்? *(17-19)*
- முதல் இரண்டு இடங்களில் சவுல் என்ன போதித்தார், எதை சந்தித்தார்? *(அப். 9:20-30)*

ஊழியத்தின் போது சவுல் (இப்போது பவுல் என்று அழைக்கப்பட்டார்) எவ்வாறு பாடனுபவித்தார் என்பதை **அப். 13:49-14:23** ல் காண்க.

- மக்கள் நம்மை ஏற்றுக்கொள்ளாத போது காலில் உள்ள தூசியை உதறிப் போடுமாறு இயேசு கூறினார் (மத். 10:14). அந்தியோகியாவை விட்டு சென்ற போது யாருக்கு எதிராக இதை பவுலும் பர்னபாவும் செய்தனர்? *(அப். 13:50-51)*

- தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க சீஷர்கள் எதன் வழியாக கடந்து போக வேண்டும்? *(அப். 14:22).*
- இக்கோனியாவை விட்டு அப்போஸ்தலர்கள் ஏன் ஓடிப்போனார்கள்? *(அப். 14:1-6)*
- பவுலைக் கல்லெறிந்த மக்கள் ஏன் அவரை லீஸ்திராவை விட்டு வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள்? *(அப். 14:7-20).*

எவ்விதங்களில் எல்லாம் பவுல் துன்பப்பட்டார் என்பதை 2 கொரி 11:23-33 ல் காண்க.

யார் துன்பப்படுவதை எதிர்நோக்கி இருக்க வேண்டும் என்பதை 2 தீமோ. 3:10-12 ல் காண்க.

பவுலையும் சீலாவையும் பிலிப்பி பட்டிணத்து மக்கள் ஏன் மோசமாக நடத்தினார்கள் என்பதை அப். 16:16-34 ல் காண்க.

பாடுகள் இருந்த போதிலும் பொதுவாக என்ன நடக்கிறது என்பதற்கு ஓர் உதாரணத்தை அப். 17:12 ல் காண்க.

தெசலோனிக்கியர் எவ்விதங்களில் இயேசுவைப் போலவும் பவுலைப் போலவும் நடந்து கொண்டனர் என்பதை 1 தெச. 1:6-7 ல் காண்க.

எவ்வழிகளில் அவர்கள் யூதேயாவில் உள்ள சபைகளைப் போல செயல்பட்டனர் என்பதை 1 தெச. 2:14-16 ல் காண்க.

துன்பத்தை சகிப்பது பற்றி நாம் விசுவாசிகளிடம் கூற வேண்டியது 1 தெச. 3:2-4 ல் காண்க.

கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கு பெறும்போது அவரோடு நாம் பகிர்ந்து கொள்வது என்ன என்பதை ரோமர் 8:16-17 ல் காண்க.

மக்கள் நம்மை மோசமாக நடத்தும் போதும் நம் இருதயத்தில் சமாதானம் ஏன் உண்டாகிறது? (ரோமர் 8:28).

இயேசுவின் அன்பின் நிமித்தமாக நாம் எந்தெந்த விஷயங்கள் மீது வெற்றி கொள்ள முடியும்? (ரோமர் 8:33-39).

பாடுகளை சகித்தால் நமக்கு என்ன வகையான பலன் கிடைக்கும்? (மத். 5:10-12).

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை இந்த உலகம் ஏன் வெறுக்கிறது? (யோவான் 15:18-19).

## 2. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்

- பாடுகளை எதிர்நோக்கி அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்ள பலம் தருமாறு தேவனை நோக்கி இணைந்து ஜெபியுங்கள்.
- பாடுகளுக்கு இரையானவர்களை சந்தித்து ஜெபித்து தேவ வாக்குத்தத்தத்தை உறுதி செய்யுங்கள்.
- பாடுகளுக்கு பயந்து உங்கள் மந்தை ஒரு முக்கியமான காரியத்தைப் புறக்கணித்து வந்தால், வழிகாட்டுதல் பெற ஜெபிக்கவும். துன்புறுத்தல் நிகழும் படியாக பவுல் என்ன செய்தார் என்பதை கருதிப் பார்க்கவும் (இயேசுவை பின்பற்றியது, அவரது வார்த்தையை போதித்தது, குணமாக்கியது, பிசாசுகளைத் துரத்தியது, பயபக்தியோடு வாழ்ந்தது போன்றவை).
- உலகளாவிய பத்திரிக்கைகளில் செய்தி தரும் நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- பாடுகளை எதிர்கொள்ளும் திட்டங்களில் ஒன்றுபட்டு முடிவுகள் எடுக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

உங்கள் மந்தையின் தற்போதைய தேவைகளுக்கும், அந்தந்தப் பகுதியில் நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் முடிவுகள் எடுக்கவும்.

**மாற்கு 8:34-38** லிருந்து இயேசுவின் பாடுகளைக் குறித்த உண்மைகளை எடுத்து **விளக்கவும்.**

பவுலின் பாடுகள் குறித்த சத்தியங்களை **விளக்கவும்.** பவுல் சகித்துக் கொண்ட பாடுகள் பற்றிய கதைகளை நடித்துக் காட்டவும் அல்லது மனப்பாடமாகக் கூறவும்.

பாடுகள் பற்றிய உண்மைகளை **விவரிக்கவும்.**

- மேலே பட்டியல் இடப்பட்டுள்ள வசனங்கள் எழுப்பிய கேள்விகளை வாசித்து விவாதிக்கவும்.
- நம்மைத் துன்புறுத்துபவர்களை இரட்சித்தும் (அப். 9:1-31), அரசாங்க அதிகாரிகளுக்காக நாம் செய்யும் விண்ணப்பங்களுக்கு பதில் அளித்தும் (1 தீமோ. 2:1-2). தேவன் எவ்வாறு அவ்வப்போது தமது மக்களுக்கு ஒரு சமாதானத்தின் காலத்தை அளிக்கிறார் என்பதை விளக்கவும்.

தாங்கள் தயாரித்த நாடகம் மற்றும் கேள்விகளை சிறியவர்கள் பெரியவர்களுக்கு வழங்கட்டும்.

பாடுகளை சமீபத்தில் தாங்கள் எவ்வாறு எதிர் கொண்டார்கள் என்பது பற்றி விசுவாசிகள் சாட்சி பகரட்டும்.

இயேசு, தாமும் நாமும் பானம் பண்ண வேண்டிய மரணத்தின் பாத்திரத்தைக் குறித்து கூறியதை மாற்கு 10:32-44 ல் இருந்து வாசித்து அல்லது மனப்பாடமாகக் கூறி கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்தவும். கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய பிரகாரமாக இணைக்கப்பட்ட நாம், பாவத்துக்கு மரித்து விட்டோம் என்பதைக் **கர்த்தரின் பந்தி** உதவுகிறது என்பதை விளக்கவும்.

ஜெபிக்கவும், பாடுகளை எதிர் கொள்ளும் திட்டங்களை உறுதிப்படுத்தவும், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும் இருவர் அல்லது மூவர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

**மனப்பாடம் செய்க:** 2 தீமோ. 3:12.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net